செய்தி வெளியீடு எண் : 1261 நாள் : 28.06.2023

## செய்தி வெளியீடு

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத் இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அலுவலகங்களில் பணியிலிருக்கும் போது மரணம் அடைந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் என 26 நபர்களுக்கு பணி நியமன ஆணை மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மயிலாடுதுறை, தென்காசி, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்ட நிலஅளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநர்களுக்கு ரூ.48.39 இலட்சம் மதிப்பிலான புதிய ஈப்பு வழங்கும் விழா 26.06.2023 அன்று இயக்குநர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம், சர்வே இல்லம், சென்னை கூட்ட அரங்கத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டு கருணை அடிப்படை பணி நியமன ஆணைகளை பணியாளர்களுக்கும், புதிய ஈப்பிற்கான சாவிகளை உதவி இயக்குநர்களுக்கும் வழங்கினார்கள்.

இவ்விழாவில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் திரு. எஸ்.கே.பிரபாகர், இ,ஆ,ப., நில நிர்வாக ஆணையர் திரு. ஆர்.நாகராஜன், இ.ஆ.ப., சமூக பாதுகாப்புத்திட்டம் முனைவர். ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., வருவாய் நிர்வாக இணை ஆணையர் திரு. சு.சிவராசு, இ.ஆ.ப., நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் திரு. ப.மதுசூதன் ரெட்டி இ.ஆ.ப., நிலஅளவை பதிவேடுகள் துறை கூடுதல் இயக்குநர் (பொ) திரு. அ.கண்ணபிரான், இணை இயக்குநர்கள், மண்டலத் துணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in